தில்லே ஏந்தல் பஞ்சாயத்து தலைவர்

*** 162 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் வட்டம், தில்லை ஏந்தல் பஞ்சாயத்து தலைவர்மீது அந்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் புகார் மனு கொடுத்து 2 ஆண்டுகளாகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: குற்றச்சாட்டுகள் மீது அவ்வப்போது விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. மெய்ப்பிக்கப்பட்ட சில ஒழுங்கீனங்களுக்காக அந்த ஊராட்சித் தலைவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி மன்ற எழுத்தர்களின் சம்பளம்

*** 163 வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்ற (Panchayat Board) எழுத்தர்களுக்கு எந்த அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கம், நகராட்சி, மாவட்ட வாரியம் ஆகியவற்றைச் சேர்ந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கு சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்த சம்பள வீதங்களின் அடிப்படையிலேயே ஊராட்சியைச் சேர்ந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கும் சம்பள வீதம் முடிவு செய்யப்பட்டது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, சில மைனர் பஞ்சாயத்துக்களில் பணி புரியும் எழுத்தர்களுக்கு பத்து ரூபாய் என்கிற அளவுக்குக்கூட மிகக் குறைந்த சம்பளம் அந்த ஊராட்சி மன்றத்தால் நிர்ணயிக்கப்படுவதால், அது அவர்களுடைய வாழ்க்கைக்கு எந்த வகையிலும் உதவி செய்யத்தக்க நிலையில் இல்லாதிருப்பதால், குறைந்தபட்சம் மைனர் பஞ்சாயத்து எழுத்தர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயித்து அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அவர்களெல்லாம் அரசாங்க ஊழியர்கள் பட்டியலில் இடம் பெறுவதில்லை. அவர்கள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். க்ரூப் க்ளார்க் என்ற வகையில் நான்கைந்து ஊராட்சி மன்றங்களுக்கு ஒருவராக நியமித்துக் கொள்ளப்பட்டு,அவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவேதான், அவர்களுக்கு அந்தச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அரசாங்கத்தோடு தொடர்புடையவர்கள் அல்ல.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த நகரப் பஞ்சாயத்துக்களில் வேலை செய்கின்ற சிப்பந்திகளைச் சர்க்கார் சிப்பந்திகளாக மாற்றி, அவர்களுடைய சம்பள விகிதத்தை மாற்றியமைக்க இந்த அரசுக்கு ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பேரூராட்சி ஒன்றியங்களில் வேலை செய்கின்ற சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்படுமா ? அதே நேரத்தில் ஜீப் டிரைவர்களுக்குச் கொடுக்கப்படக்கூடிய பயணப் படி விகிதம் அவர்களுக்குக் கட்டுப்படியாகாமல் இருப்பதாகச் சொல்லுவதால், அதை உயர்த்துவதற்கும் அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அவையெல்லாம் தனியாகக் கேட்கப்பட வேண்டியவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊராட்சி மன்றத்திலிருந்து பேரூராட்சிமன்றம், நகராட்சிமன்றம் என்று இப்படியெல்லாம் வந்து, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் துணைக் கேள்விகள் வந்து கொண்டிருக்கின்றன. மூலக் கேள்விக்குத் தொடர்புள்ள கேள்விகளே கேட்கப்பட வேண்டும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : கிராம ஊராட்சி மன்றங்களிலே பணிபுரியும் எழுத்தர்களுக்கு அந்தக் கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறது என்று அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால், அவைகளை மாற்றி அமைத்து, அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதற்கு இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே அது பற்றிய விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறேன். மு.ப. 9–39

திரு. என். எஸ். வி. சித்தன் : ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறதோ அதே விகிதத்தில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காகப் போராடிய நாம், அதில் கவனம் செலுத்தி வருகிற நாம், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படிக் கொடுக்கப்படுகிறதோ அதே போல் பஞ்சாயத்து ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்க இன்றைக்கு இல்லாவிட்டாலும் அடுத்தாற்போல் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊழியர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க இந்த அரசு மனப்பூர்வமாக ஆர்வம் கொண்டிருக்கிறது. இருந்தாலும் ஊராட்சி நிதிநிலையை மனத்தில் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்ற நிலையில், தற்போது வருகிற வருமானத்தில் சிலபல ஊராட்சிகளில் 85 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகை ஊதியமாகவே கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, வரி செலுத்துவோர் குறைகளையும் கவனித்துத் தீர வேண்டிய நெருக்கடி நிலை இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள், அப்பர் டிவிஷன் க்ளார்க்ஸ், ஆகியோருடைய சம்பள விகிதங்கள் இன்க்ரிமெண்ட் ஆகியவை அரசாங்கத்தில் பணி புரிகின்றவர்களுக்கு இருப்பதைப் போல் அல்லாமல் வித்தியாசமாக இருக்கிறது. இதையெல்லாம் சரி செய்து அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பது போல் சம்பள விகிதத்தைக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே சொன்னபடி சம்பளக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இன்னின்ன விகிதங்களில் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்க நிதிநிலை சீரான நிலையைப் பெற்றால்தான் முடியும். அந்தக் குறைகளை எல்லாம் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மேட்டுப்பாளையம் பகுதியில் தொழிலாளர் மருத்துவ மனை.

*வினா 164. **திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியில் ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?